# <u>குளித்தலை நகராட்சி</u>

31.05.2021.ஆம் தேதி திங்கட்க்கிழமை மாலை 4.15 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.ம.முத்துக்குமார், அவர்களின் மார்ச், ஏப்ரல், மே–2021ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் திரு.இரா.இராதா அவர்களின் மார்ச், ஏப்ரல், மே–2021ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-AY-6449 (BEML) வாகனத்திற்கு 2021–ஆம் ஆண்டிற்கான சாலைவரி தொகை ரூ.10,000/– வட்டார போக்குவரத்து அலுவலகம், குளித்தலை நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி சுகாதார பிரிவின் அவசியம் கருதி செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.484/2021/எச்1)

பொருள்– 04. கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை அதிவேகமாக பரவி வருவதால், இந்நகராட்சி பகுதியில் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவைப்படும் பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத்தூள், லைசால், முகவுரை மற்றும் கையுரைகள் போன்றவைகள், தரமணி மகளிர் எழுதுபொருட்கள் மற்றும் அச்சு பொருட்கள் தயாரிப்பு தொழில் கூட்டுறவு சங்கம், சென்னை நிறுவனத்தின்மூலம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.650/2021/எச்1)

..2..

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு **2021–2022**ஆம் ஆண்டிற்கான சாலைவரி தொகை ரூ.**19526/–**ஐ, வட்டார போக்குவரத்து அலுவலகம், குளித்தலை அலுவலகத்தில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| வ. எண்.<br>வாகனத்தின் எண்<br>தொகைரூ.<br><br>1)<br>TN47 AS 5370<br>**7526.00**<br><br>2)<br>TN47 X 0031<br>**6000.00**<br><br>3)<br>TN47 F 1522<br>**6000.00**<br><br>மொத்தம்<br>**19526.00** | | |

அலுவலக குறிப்பு– தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதால் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி சுகாதார பிரிவின் அவசியம் கருதி செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.609/2021/எச்1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சி பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 01.04.2018 முதல் 31.03.2021 வரை ஏலம் எடுத்து நடத்திவந்த திருமதி.ஆர்.விஜயலட்சுமி என்பவர், 2020–2021ஆம் ஆண்டுக்கு ரூ.1,74,260/– குத்தகை தொகை செலுத்தவில்லை. பலமுறை தொகை செலுத்த கோரியும் குத்தகை தொகை செலுத்தாத காரணத்தால், குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர அரசு வழக்கறிஞரின் 28.04.2021ஆம் தேதியிட்ட கடிதத்தில் ரூ.13500/– வழங்க கோரியுள்ளார். மேற்கண்ட தொகை வழங்கவும், திரு.என்.மனோகரன், அரசு வழக்கறிஞர் வசம் கோப்பு ஒப்படைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.653/2021/அ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2021–2022ஆம் ஆண்டிற்கான காப்பீடு தொகை ரூ.41591/–ஐ, யுனைடெட் இந்தியா காப்பீடு, குளித்தலை நிறுவனத்திற்கு தொகை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| வ. எண்.<br>வாகனதின் எண்<br>தொகைரூ.<br><br>1)<br>TN47 X 0031<br>31451.00<br><br>2)<br>TN47 AY 6449<br>10140.00<br><br>மொத்தம்<br>41591.00 | | |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி காப்பீடு கழகத்திற்கு தொகை செலுத்தியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.580/2021/எச்1)

..3..

பொருள்– 08. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை அதிவேகமாக பரவி வருவதால், இந்நகராட்சி பகுதியில் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவைப்படும் பிளீச்சிங் பவுடர், லைசால், முழு உடல் உறை, முக உறை மற்றும் கையுறைகள் போன்றவைகள், தரமணி மகளிர் எழுதுபொருட்கள் மற்றும் அச்சு பொருட்கள் தயாரிப்பு தொழில் கூட்டுறவு சங்கம், சென்னை நிறுவனத்தின்மூலம் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.650/2021/எச்1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்கள் மற்றும் புகைபோக்கி இயந்திரங்களுக்கு 2021–2022ஆம் ஆண்டிற்கு தேவையான எரிபொருள் K.M.V.N.பிரேம்குமார் பெட்ரோல் பங்க், குளித்தலை நிறுவனத்தின்மூலம் நேரடியாக வாங்கிகொள்வதற்கும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.15,00,000/–க்கும் (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| வ. எண். வாகன விபரம்<br><br>1) TN-47-AS-5370 குப்பை லாரி<br><br>2) TN-47-X-0031 குப்பை லாரி<br><br>3) TN-47-AS-5098 ஆட்டோ<br><br>4) TN-47-AS-5109 ஆட்டோ<br><br>5) TN-47-F-1522 கழிவுநீர் வாகனம்<br><br>6) TN-47-AY-6449 BEML – Front & Back Loader<br><br>7) TN-47-BW-1379 கிருமி நாசினி தெளிக்கும் டிராக்டர் | |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.555/2020/எச்1)

பொருள்– 10. குளித்தலை நகராட்சி அலுவலகத்தில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் தபால் தலைகளுக்கு 2021–2022ஆம் நிதி ஆண்டிற்கு உத்தேச செலவினம் ரூ.15000/–க்கு (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.536/2020/டி2)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், கொரோனா நோய் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு, மூன்று அல்லது அதற்குமேற்பட்ட தொற்றுள்ள பகுதியினை கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக கருதி, அப்பகுதியினை அடைப்பதற்கு தேவைப்படும் பொருட்களை, அவசர அவசியம் கருதி, துப்புரவு ஆய்வர் திரு.க.இஸ்மாயில் அவர்களால் ரூ.11,300/– செலவினத்தில் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டது. எனவே, செலவினத் தொகை ரூ.11,300/–ஐ, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.இன்கீழ் அன்னாருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.745/2021/எச்1)

..4..



பொருள்– 12. அரசாணை(ப) எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.1) துறை, நாள்–17.01.2013 மற்றும் அரசாணை(நிலை) எண்.118, நாள்–26.09.2014.இன்படி, குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், கீழ்க்கண்ட விபரப்படி 2021–2022ஆம் ஆண்டுக்கு வாங்குவதற்கும், அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதற்கும் உத்தேச செலவினம் ரூ.40,00,000/–க்கு (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

உணவு பொருட்கள் மற்றும் சப்ளைசெய்யும் நிறுவனம் விபரம்

1)
அரிசி
=
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிட்டங்கி, அய்யர்மலை

2)
மளிகை பொருட்கள்
=
கரூர் மாவட்ட மொத்த கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலை YK.159, கருர்.

3)
எரிவாயு உருளைகள்
=
ஸ்ரீமூகாம்பிகை கேஸ் ஏஜென்சீஸ், குளித்தலை.

4)
பால் விநியோகம்
=
நகராட்சி வருவாய் உதவியாளர் மூலம் செலவினம் மேற்கொள்ளுதல்

5)
காய்கள் விநியோகம்
=
நகராட்சி வருவாய் உதவியாளர் மூலம் செலவினம் மேற்கொள்ளுதல்

6)
அம்மா உணவகத்தில் பணிபுரியும் ''ஸ்ரீசாய்ராம் மகளிர் சுயஉதவி குழு'' பணியாளர்களின் மாத ஊதியம்

7)
உணவு விநியோகம் செய்ய டோக்கன்கள் அச்சடித்தல் மற்றும் மின்கட்டணம் செலுத்துதல்.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1083/2014/டி2)

பொருள்– 13. குளித்தலை நகராட்சியில் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை துண்டிப்பு கட்டணம் அரசு விதிகளின்படி நிர்ணயம் செய்யவேண்டி உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை

அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/2008/கு.வ.வா., நாள்–21.09.2009இன்படி கீழ்க்கண்டவாறு விலை விகிதங்கள் மாற்றி அமைக்கவும்,

| | | | |
|---|---|---|---|
| நகராட்சிக்கு கட்டணம்<br>செலுத்தும் சாலை அளவு<br>கருங்கல் ஜல்லி சாலை<br>தார்<br>சாலை<br>சிமெண்ட் சாலை<br><br>0–30<br>ரூ. 1050/–<br>ரூ. 2250/–<br>ரூ. 4041/–<br><br>30–90<br>ரூ. 1650/–<br>ரூ. 2850/–<br>ரூ. 4666/– | | | |

மேற்படி சுற்றறிக்கையின்படி 2009 முதல் ஒவ்வொரு ஆண்டிற்கும் சாலை சீரமைப்பு கட்டணம் 5% உயர்த்த வேண்டும். அதன்படி முந்தைய ஆண்டுகளுக்கு கணக்கிடப்பட்டுள்ளது. 2021–2022இல் சாலை துண்டிப்பு கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| சாலையின் நீளம்<br>தார் சாலை<br>சிமெண்ட் சாலை<br><br>0–30 மீ.<br>ரூ.4041/–<br>ரூ.4666/– | | |

என்கிற விகிதத்தில் மாற்றம் செய்து வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1153/2018/இ1)

..5..

பொருள்– 14. குளித்தலை நகராட்சியில் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும் குடிநீர் தலைமை நீர்உந்து நிலையத்தில் நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் ஆகிய இரண்டு இடங்களில் உள்ள மின் மோட்டார்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதால், அதனை மாற்றம் செய்து புதிதாக பொருத்துவதற்கு மதிப்பீடு ரூ.8,00,000/– (ரூபாய் எட்டு லட்சம் மட்டும்) 26.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வ. எண். பணி விபரம் ஒப்பந்த தாரர் பெயர் மதிப்பீடு விகிதம்<br><br>1) குளித்தலை நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் புதிதாக மின் மோட்டார் பொருத்தும் பணி.<br>1). திரு.எம். செந்தில் குமார், குளித்தலை. 0.24 % குறைவு<br><br>2). நந்தினி ஏஜென்சி, குளித்தலை. 2.78 % அதிகம் | | | |

அலுவலக குறிப்பு– **1).** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் **0.24** % குறைவாக குறிப்பிட்டுள்ள திரு.எம்.செந்தில்குமார் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). அவசர அவசியம் கருதி குடிநீர் தேவையை கருதி ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1343/2020/இ1

பொருள்– 15. இந்நகராட்சி 2020–2021.ஆம் ஆண்டுக்கு இந்நகராட்சிக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், கணனி பிரிவிற்கு தேவையான பேப்பர்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றினை அவ்வப்போது தேவைக்கேற்ப, அரசு சார்பு நிறுவனமான தரமணி மகளிர் எழுது பொருட்கள் மற்றும் அச்சு தயாரிப்பு தொழில் கூட்டுறவு சங்கம் நெ.46, (பழைய எண்.248) பீட்டர்ஸ்ரோடு, ராயப்பேட்டை, சென்னையில் வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/–த்திற்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்ற தீர்மானம் எண்.104, நாள்–30.11.2020இல் அனுமதிக்கப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டதில், ரூ.69,629/– கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, 2021–2022 ஆண்டுக்கு மேற்கண்ட கூடுதல் செலவினம் ரூ.69,629/– சேர்த்து, உத்தேச செலவினம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) மேற்கொள்ளவும், மேற்கண்ட நிறுவனத்தின்மூலம் பொருட்களை வாங்கி பயன்படுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1660/2020/காசாளர்)

பொருள்– 16. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொசு ஒழிப்பு டெங்கு தடுப்பு பணிக்காக கொசு புழுக்கள் ஒழிப்பு பணியாளர்களுக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 2019–2020ஆம் வருட தரவிலை பட்டியல்படி, 1–நபருக்கு ரூ.328/–வீதம் வழங்க இந்நகராட்சி மன்ற தீர்மானம் எண்.222, நாள்–31.01.2020இல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்தரவு இ1/4822/2020, நாள்–05.06.2020.இன்படி, 2020–2021ஆம் வருட தரவிலை பட்டியல்படி தினக்கூலியாக 1–நபருக்கு ரூ.362/–வீதம் வழங்கவும், கூடுதல் செலவினத் தொகை ரூ.297840/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1326/2017/எச்1)

பொருள்– 17. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-F-1522 என்ற எண்ணுள்ள கழிவுநீர் வாகனத்திற்கு தகுதிச்சான்று பெற அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் வாகனத்தை ஒப்படைப்பு செய்து பழுது நீக்கம் செய்து தகுதிச்சான்று பெற்று நகராட்சிவசம் ஒப்படைப்பு செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.1,45,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– கொரோனா வைரஸ் பரவிவரும் சூழ்நிலையில் சுகாதார பணி மிக முக்கிய பணி என்பதால், உடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண.651/2021/எச்1)

பொருள்– 18. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாததால், உடன் மேற்கண்ட கழிப்பிடங்களை மராமத்து பணிகள் செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, கீழ்க்கண்ட இடங்களில் உள்ள கழிப்பிடங்களை மராமத்துப் பணி செய்ய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் (பணிகள் செய்ய தெரிவித்து) கடிதம் கொடுத்து உள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| வரிசை எண்.<br>பணியின்<br>விபரம்<br>தொகை<br>(ரூபாயில்)<br><br>1)<br>டவுன்ஹால் சாலையில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம் மராமத்துப் பணி செய்ய<br>ரூ.1,60,000/–<br><br>2)<br>மலையப்பநகர் பகுதியில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம் மராமத்துப் பணி செய்ய<br>ரூ.2,00,000/–<br><br>3)<br>பழைய டோல்கேட் தெருவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம் மராமத்துப் பணி செய்ய<br>ரூ.1,25,000/–<br><br>4)<br>செக்கடி புதுத்தெருவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம் மராமத்துப் பணி செய்ய<br>ரூ.1,65,000/–<br><br>மொத்தம்<br>ரூ.6,50,000/– | | |

மேலே கண்டுள்ள விபரப்படி அதன் எதிரே குறிப்பிட்டு உள்ள தொகைக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய பணிகள் செய்யவும், மேற்கண்ட மதிப்பீடு தொகை மொத்தம் ரூ.6,50,000/– செலவு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டில் பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.292/2021/இ1)

பொருள்– 19. குளித்தலை நகராட்சியின் பரப்பளவு 11.16 ச.கி.மீட்டர். இதனை 24 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மொத்த குடிநீர் இணைப்புகள் 2450 எண்ணங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பொதுக் குழாய்கள் மொத்தம் 66 எண்ணங்கள் உள்ளது. நகராட்சி மூலம் தண்ணீர் விநியோகம் செய்யும்போதும், காவேரி ஆற்றிலிருந்து பம்பிங் செய்யும்போதும், குழாய்கள் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகிறது. அதனை உடனடியாக நிறுத்துவதற்கு போதுமான நபர்கள் இந்நகராட்சியில் இல்லாததால், ஒப்பந்த அடிப்படையில் இப்பணியினை செய்வதற்கு மதிப்பீடு ரூ.9,00,000/–க்கு (ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்) தயார் செய்து வைக்கப்பட்டுள்ள தொகையினை குடிநீர் நிதியிலிருந்து ஈடுசெய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட தொகையினை குடிநீர் நிதியிலிருந்து 2021–2022ஆம் ஆண்டு செலவு கணக்கில் ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.747/2021/இ1)

பொருள்– 20. நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.23இல் அண்ணாநகர் என்.ஜி.ஜி.ஓ.காலனி பூங்கோதை மருத்துவமனை அருகில் பக்கவாட்டு சுவர் மற்றும் கான்கிரீட் தளம் இவைகள் பழுதுடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள காரணத்தால், கழிவுநீர் வடிகால் பராமரிப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மேற்கண்ட பணியினை செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகை ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து 2021–2022ஆம் ஆண்டு செலவினத்தில் ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.483/2021/இ1)

பொருள்– 21. இந்நகராட்சி 2021–2022.ஆம் ஆண்டுக்கு இந்நகராட்சிக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள், கணனி பிரிவிற்கு தேவையான பேப்பர்கள் மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றினை அவ்வப்போது தேவைக்கேற்ப, அரசு சார்பு நிறுவனமான தரமணி மகளிர் எழுது பொருட்கள் மற்றும் அச்சு தயாரிப்பு தொழில் கூட்டுறவு சங்கம் நெ.46, (பழைய எண்.248) பீட்டர்ஸ்ரோடு, ராயப்பேட்டை, சென்னையில் வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,00,000/–த்திற்கும் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1660/2020/காசாளர்)

பொருள்– 22. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி, கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை அதிவேகமாக பரவி வருவதால், இந்நகராட்சி பகுதியில் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவைப்படும், கிருமி நாசினிகள், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இதர பொருட்கள் போன்றவைகள், தரமணி மகளிர் எழுதுபொருட்கள் மற்றும் அச்சு பொருட்கள் தயாரிப்பு தொழில் கூட்டுறவு சங்கம், சென்னை நிறுவனத்தின்மூலம் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.5,00,000/–க்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.650/2021/எச்1)

பொருள்– 23. குளித்தலை நகராட்சிக்கு ஆணையர், பொறியாளர் வெளியிலிருந்து இங்கு தங்கி பணிபுரிய ஆணையர் அவர்களுக்கு குடியிருப்பு ஏற்கனவே உள்ளது. அதன் அருகில் பொறியாளருக்கு குடியிருப்பு அமைக்க வேண்டியது அவசியமாகிறது. கட்டிடம் கட்டப்பட்ட நிலையில் குடியிருப்புக்கு தேவையான ஆழ்துளை கிணறு, சுற்று சுவர் மற்றும் இதரப் பணிகள் செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட பணிகளை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9,20,000/–க்கு (ரூபாய் ஒன்பது லட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்படி செலவினத்தை 2021–2022ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.214/2021/இ1)

பொருள்– 24. குளித்தலை நகராட்சி பகுதியில் கோடை காலங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதாலும், ஆணையர் மற்றும் பொறியாளர் அமர்ந்து வேலை செய்வதற்கு போதுமான இடவசதி இல்லாததாலும் டின் சீட் கொண்டு ஒரு அறை அமைக்கப்பட்டது. அதில் அமர்ந்து வேலை செய்ய இயலாத காரணத்தினால் குளிர் சாதனப் பெட்டி அமைப்பது மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது. எனவே, இரண்டு அறைகளுக்கும் குளிர் சாதனப் பெட்டி வைக்கவும் மற்றும் அதற்கு தேவையான இதர பாகங்கள் வாங்குவதற்கும் உத்தேச செலவினம் ரூ.2,30,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டு பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.718/2021/இ1)

பொருள்– 25. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இரண்டு இடங்களில் உயர் மின்கோபுர விளக்குகள் அமைத்து 800–வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்கண்ட விளக்குகள் அமைத்து சுமார் 10 வருடங்கள் கடந்த நிலையில் விளக்குகள் பழுதடைந்து விட்டதால் அதனை மாற்றம் செய்வது மிகவும் அவசியமாகிறது. மேற்கண்ட விளக்குகள் நாள் ஒன்றுக்கு சுமார் 12 மணிநேரம் எரியும் நிலையில், இரண்டு விளக்குகளும் சேர்த்து மாதம் ஒன்றுக்கு 3460 யூனிட் மின்சார பயன்பாட்டிற்கு ரூ.19030/– செலவு செய்யப்படுகிறது. இதனால் மேற்கண்ட ஆவி விளக்கினை மாற்றம் செய்து, LED 150 வாட்ஸ் விளக்குகளாக பொருத்தினால், மாதத்திற்கு 650 யூனிட் மின்சாரத்திற்கு ரூ.3575/– மட்டுமே செலவு ஆகும். இதனால் மாதம் ஒன்றுக்கு ரூ.15455/– செலவு குறையும். எனவே, LED 150 வாட்ஸ் விளக்குகள் அமைக்கவும், இப்பணிக்கு ஆகும் மொத்த செலவினம் ரூ.4,15,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினதை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.719/2021/இ1)

பொருள்– 26. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லாததால், உடன் தார்சாலை மற்றும் மழைநீரை வடிகால் சரிசெய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே, கீழ்க்கண்ட இடங்களில் உள்ள தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் செய்துதரக்கோரி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| வ. எண். பணியின் விபரம் மதிப்பீட்டுத் தொகை (ரூபாய்)<br><br>1) காவேரிநகர் வளைவில் இருந்து நூல் நிலையம் வரை தார்சாலை Patch Work 3,30,000/–<br><br>2) டாக்டர்.கலைஞர் பொன்விழா வளைவில் இருந்து குருசாமி மருத்துவமனை வரை தார்சாலை அமைத்தல் 4,50,000/–<br><br>3) பேருந்து நிலையம் தென்புறம் டாக்டர் ஜோதிமணி மருத்துவமனை முதல் காவேரிநகர் | | |

மேற்கண்ட விபரப்படி அதன் எதிரே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கும், உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.14,10,000/– செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.822/2021/இ1)

பொருள்– 27. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் இயங்கிவரும் அம்மா உணவகத்திற்கு தேவையான குடிநீர் அரசு மருத்துவமனை கட்டிடத்திமேல் இருந்து வந்தது. தற்போது மேற்படி தண்ணீர் தொட்டியினை அம்மா உணவகத்திற்கு அருகில் கொண்டு செல்லுமாறு அரசு மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளதன்பேரிலும், மேற்கண்ட பணியுடன் மின்சாதன பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. ஏனவே, மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/–க்கு (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினத்தை 2021–2022ஆம் ஆண்டு பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.
(ந.க.எண்.849/2021/இ1)

பொருள்– 28. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள 24 வார்டுகளில் பொதுக்கழிப்பிடம் மற்றும் மினிபவர் பம்புகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இருந்து வருகிறது. அதில் சில மோட்டார்கள் பழுதடைந்துள்ளது. அதனை பொதுமக்கள் நலன்கருதி உடனடியாக மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் முதல்வர் தனி பிரிவிற்கு மனுக்கள் அனுப்பி வருகின்றார்கள். எனவே, அவசரம் அவசியம் கருதி பழுது நீக்கம் செய்ய உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத் தொகை ரூபாய் மூன்று இலட்சம் செலவு மேற்கொள்ளவும், பணியினை செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினத்தை 2021–2022ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.822/2021/இ1)

பொருள்– 29. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண்.14இல் சேதுரெத்தினம்பிள்ளை தெருவில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடம் பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது அதனை பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அந்த பொதுக் கழிப்பிடத்தை மராமத்து பணி (பழுது நீக்கம்) செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,60,000/–க்கு (ரூபாய் மூன்று லட்சத்து அறுபது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினத்தை 2021–2022ஆம் ஆண்டு பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.422/2021/இ1)

*****

# குளித்தலை நகராட்சி

31.05.2021.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 168 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 169 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 170 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 171 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 172 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 6 | 6 | 173 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 174 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 8 | 8 | 175 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 176 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 177 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 178 | பதிவு செய்யப்பட்டது. |
| 12 | 12 | 179 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 180 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 181 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 15 | 15 | 182 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 183 | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 184 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 18 | 18 | 185 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 19 | 19 | 186 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 20 | 20 | 187 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 21 | 21 | 188 | அனுமதிக்கப்பட்டது. |
| 22 | 22 | 189 | அனுமதிக்கப்பட்டது. |
| 23 | 23 | 190 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 24 | 24 | 191 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 25 | 25 | 192 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 26 | 26 | 193 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 27 | 27 | 194 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 28 | 28 | 195 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| 29 | 29 | 196 | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

ஒம்/–ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.